விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 042 வள்ளுவர் ஆண்டு 2056 தை 17 வியாழக்கிழமை (30.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## கலைப்பீட மாணவர் இருவருக்கு வகுப்புத் தடை
### அங்கீகரித்தது பேரவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர் இருவருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய வளாகத்துக்கு முன்பாக நடந்த சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே மேற்படி மாணவர் இருவருக்கு யாழ்.பல்கலைக்கழக ஒழுக்காற்றுச் சபையால் வகுப்புத் தடை விதிக் ▷02

## அநுர நாளை யாழ்.விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அன்றைய தினம் நடைபெறவுள்ள யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் ▷02

## யோஷிதவிடமிருந்து 7 துப்பாக்கிகள் பறிமுதல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவிடம் இருந்த ஒன்பது துப்பாக்கிகளில் ஏழு துப்பாக்கிகளை பாதுகாப்பு அமைச்சகம் கைப்பற்றியுள்ளது எனப் பாதுகாப்புச் செயலாளர் ஏர்வைஸ் மார்ஷல் சம்பத் துய்யா கொந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பாதுகாப்பு ▷15

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின்
# மூத்த தலைவர் மாவை காலமானார்



(யாழ்ப்பாணம்) இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா (வயது-82) நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் காலமானார்.

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் உள்ள தனது வீட்டில் தவறிவிழுந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாவை சேனாதிராஜா நேற்றிரவு 10 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று குடும்பத்தவர்கள் தெரிவித்தனர். (ம-7,33)

## பெப்ரவரி 5ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்றம் பெப்ரவரி 05ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரை கூடவிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹண தீர தெரிவித்தார்.

கடந்த 23ஆம் ▷15

## விரிவுரைகள் இன்று வழமைக்கு

(யாழ்ப்பாணம்)


யாழ்.பல்கலைக்கழக ஒழுக்காற்றுச் சபை எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதென நேற்றைய தினம் கூடிய யாழ்.பல்கலைக்கழகப் பேரவை தீர்மானித்ததையடுத்து ▷15

### கிளிநொச்சி பெரியகுளத்தில்
## இளம் குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பெரியகுளத்தில் நேற்றுப் பகல் குளிக்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் பெரியகுளம் கண்டாவளையைச் சேர்ந்த கணேசமூர்த்தி ரமேஷ் (வயது-33) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் ▷15




## அர்ச்சுனா எம்.பி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா சாவகச்சேரியில் வைத்து நேற்றுப் பிற்பகல் அநுராதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை, கடமையில் இருந்த பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இராமநாதன் அர்ச்சுனா எம்.பி ▷15

# பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை



### இலங்கை அரசாங்கம் தொடர்பில் யாழில் பிரித்தானிய அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கத் தரப்பிலிருந்து குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என பிரித்தானியாவின் இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்குப் ▷15

### கிளி.யில் குளவிக்கொட்டுக்கிலக்கான
## 15 பேர் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஒன்பது பாடசாலை மாணவர்கள் உட்பட 15 பேர் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியில் வீதியிலிருந்த குளவிக்கூடு நேற்றுக் கலைந்தமையால் வீதியால் சென்ற பாடசாலை மாணவர்கள் ஒன்பது பேரும் வீதியால் பயணித்தவர்கள் ஆறு ▷15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



16.01.2025 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் கந்தையா புவனேஸ்வரி

அவர்களின் பாஷாண உத்வாசனக்(கல்லெடுப்பு) கிரியைகள் இன்று 30.01.2025 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு இடம்பெறும். நாளை 31.01.2025 வெள்ளிக்கிழமை சபிண்டீகரண கிரியைகள் காலை 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

புலவனார் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(C-2157)

தகவல் :
குடும்பத்தினர்

## அநுர நாளை...

கூட்டத்திலும் வல்வெட்டித்துறையில் இடம்பெறும் கூட்டத்திலும் பங்கு பற்றவுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் யாழ்ப்பாண வருகையின் போது போராட்டம் நடத்துவதற்குத் தடை விதிக்க கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதியின் வருகையின்போது போராட்டம் நடத்துவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வட மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கம் உள்ளிட்டவை அழைப்பு விடுத்திருந்தன.

இந்நிலையில், போராட்டம் நடத்துவதை தடை செய்யக் கோரி யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத் தலைவர் உட்பட ஐவரை இன்று வியாழக்கிழமை (30) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை அனுப்ப யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தடை உத்தரவு தொடர்பான மனு மீதான விசாரணை இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

## கலைப்பீட...

கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் அவசரமாகக் கூடிய யாழ்.பல்கலைக்கழகப் பேரவை இதனை அங்கீகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளரும் பொருளாளரும் தமது பதவிகளில் இருந்து விலகுவதாக நேற்றுத் துணைவேந்தருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர். (ம-7)


## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கில அறிவு/ கணனி அறிவு உடைய பெண் வேலையாட்கள் தேவை. ஓய்வு பெற்ற/ ஆங்கில அறிவுடைய மொழி பெயர்ப்பு தெரிந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

(3267)

**Exponet Overseas consultant**
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995/ 021 435 5113

**Raveens E.M.C Karaveddy**
**Admission For Grade 06 (2025)**
**(English Medium)**

- Admission From are available
- Scholars only
- Closing date 04.02.2025 (Tuesday)

Director
P.Eswaranathan

(C-2159)


## மரண அறிவித்தல்

தோற்றம்
30 - 06 - 1984



மறைவு
28 - 01 - 2025

### பூநாதன் கயூரன்

(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூநாதன் கயூரன் (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் 28.01.2025 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூநாதன் (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்) - யோகம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் டொறின் ரேணுகா (எழுதுவினைஞர் - யாழ்ப்பாணம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்புக் கணவரும் தூயகுமாரன்(ஓய்வுநிலை சிரேஷ்ட பாதுகாப்பு பரிசோதகர் - யாழ். பல்கலைக்கழகம்) - ஹேமநந்தினி (ஆசிரியை - யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாம்சந்தோஷ் மற்றும் சாம்கிங்ஸ்ரன் (யாழ். சென். பெனடிக்ற் வித்தியாலயம்), ஜோண்பிளேயர் (யாழ். சென். பெனடிக்ற் வித்தியாலயம்), சாள்ஸ் கிங்ஸ்ரன் (யாழ். சென். பெனடிக்ற் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துவாரகன், லௌசிகன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற போல் கஜேந்திரன் மற்றும் டினேஸ்காந்த் (ஊழியர் - பௌதிகவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்), பேணாட் ரிஷாந்த் (லண்டன்), போல்கஜேந்திரன் (மாணவன் - பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), மைதிலி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் லக்ஷிகா (லண்டன்) அவர்களின் உடன்பிறவாச் சகோதரனும் ஷெரினா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அவர்களின் அன்புச் சித்தப்பாவும் ஜோர்ஜ் யாதவ் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.01.2025) வியாழக்கிழமை 28/3, திருமகள் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி வீதியில் அமைந்துள்ள நல்லூர் பரி/ யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


(3268)

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கோபாலபிள்ளை தெய்வேந்திரன்

(வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் புங்குடுதீவு - 12)



பிறப்பு 12.05.1952 இறப்பு 28.01.2025

வேலணை 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு கிழக்கு 12ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது றக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை தெய்வேந்திரன் அவர்கள் 2025.01.28 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் வேலணை காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் புங்குடுதீவு காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் வேழவேந்தன் (அஞ்சல் அதிபர், அளவெட்டி), தனவேந்தன் (அமெரிக்கா). நாகதர்சினி (சம்பத்வங்கி - பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ரதீஸ்வரி. சாரா (அமெரிக்கா), பிரதீப் (முகாமையாளர் - DFCC வங்கி, மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதந்திரபாலன், மகேந்திரன், பாலேந்திரன் (அமரர்), இராஜேந்திரன், புவனேந்திரன் தவமணி, விமலேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரரும் செல்லத்துரை, ராசலஷ்மி காலஞ்சென்ற ஓங்காரநாதன் மற்றும் நாகராசா, சண்முகராசா, அருளானந்தம், சிவலிங்கம், கேதீஸ்வரி, காலஞ்சென்ற தெய்வேந்திரராணி மற்றும் சாந்தா, காலஞ்சென்ற குகனேஸ்வரி மற்றும் விமலாதேவி, பாலச்சந்திரன், நிஷந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிஷன், விபிஷன், மகிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 30.01.2025 வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.29/5, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(3264)

077 936 1390, 077 384 9095

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தின் போது

# போராட்டம் நடத்தத் தடைகோரி பொலிஸாரினால் மனு தாக்கல்!



(யாழ்ப்பாணம்)

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் யாழ். வருகையின் போது போராட்டம் நடத்துவதற்கு தடை விதிக்க கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், பொதுமக்கள் சந்திப்பு என சில நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நாளை 31 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்.

ஜனாதிபதியின் வருகையின் போது போராட்டம் நடத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கம் உள்ளிட்டவை அழைப்பு விடுத்திருந்தன.

இந்நிலையில் போராட்டம் நடத்துவதை தடை செய்யக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் மனுத்தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத் தலைவர் உள்ளிட்ட ஐவரை இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை அனுப்ப யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தடை உத்தரவு தொடர்பான மனு மீதான விசாரணை இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றத்தில் இடம் பெற உள்ளது. (நி-8-33)

# நாட்டிற்கு திரும்பும் பசில்

(கொழும்பு)

அமெரிக்கா சென்றுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச எதிர்வரும் மே மாதம் நாடு திரும்புவார் என்று மஹிந்த ராஜபக்சவின் குடும்ப உறுப்பினரான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறிய பசில் ராஜபக்ச மீண்டும் எப்போது நாடு திரும்புவார் என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-8)

# ஜனாதிபதியின் முயற்சிக்கு தடையாகவுள்ள அரசியலமைப்பு

## முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை குறைப்பதில் சிக்கல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களைக் குறைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு அரசியலமைப்பு தடையாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவகாரத்தை ஆராய்வதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவால் இந்த விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது வாக்குறுதியளித்தபடி, தேவையற்ற செலவுகளை குறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து ஆராய்ந்த குழுவினர் அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் முன்னாள் ஜனாதிபதிகளிற்கான சில சலுகைகளைக் குறைக்க முடியாது என்ற முடிவிற்கு வந்துள்ளனர்.

அரசமைப்பின் 36 ஆவது பிரிவில் இது குறித்து சில விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதை அந்த குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசமைப்பின் இந்தப் பிரிவுகளை மாற்றுவது பல காரணங்களால் அரசாங்கத்திற்கு சவாலான விடயம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதிகளிற்கான உரிமைச்சட்டத்தின்படி, முன்னாள் ஜனாதிபதிகளிற்கு வாடகைகளை வசூலிக்காமல் வீடுகளை வழங்கவேண்டும்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், அரசியலமைப்பின்படி முன்னாள் ஜனாதிபதிகளிற்கான ஓய்வூதியம் போன்ற சில சலுகைகளை உடனடியாக இரத்து செய்ய முடியாது. எனினும் பாராளுமன்ற உறுப்பினர் களிற்கான ஓய்வூதியங்களை கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# அடுத்த சில மாதங்களில் பணவீக்கம் வீழ்ச்சியடையும்

## இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

தற்போது தாழ்ந்தளவிலான நேர்மறையான மட்டங்களில் காணப்படுகின்றமையப் பணவீக்கமானது, மேல்நோக்கிச் சீராக்கப்படுவதற்கு முன்னர், அடுத்த சில மாதங்களில் மேலும் வீழ்ச்சியடையுமென இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையின்படி முதன்மைப் பணவீக்கமானது இலக்கினை நோக்கி ஒருங்கிணைவதற்கு முன்னர் குறுங்காலத்தில் எதிர்மறையாகத் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 2024 டிசம்பரில் தொடர்ச்சியாக நான்காவது மாதமாக எதிர்மறையான வீச்சில் தொடர்ந்தும் காணப்பட்டது.

இது மிதமடைந்த கேள்வி அழுத்தங்களிற்கு மத்தியில் மின்சாரத் தீர்வைகள் மற்றும் உள்நாட்டு எரிபொருள் விலைகள் என்பவற்றிற்கான முந்தைய கீழ்நோக்கிய திருத்தங்களினால் முக்கியமாக உந்தப்பட்டது.

2025ஆம்ஆண்டுஜனவரியில் அறிவிக்கப்பட்ட மின்சாரத் தீர்வையின் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க கீழ்நோக்கிய சீராக்கத்தின் காரணமாக முன்னர் எதிர்வு செய்யப்பட்டதிலும் பார்க்க தாழ்ந்தளவிலான பணச்சுருக்கத்தினை அண்மைய எதிர்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பணவீக்கமானது பொருத்தமான கொள்கைச் சீராக்கங்களினால் ஆதரவளிக்கப்பட்டு 2025 இன் நடுப்பகுதியிலிருந்து நேர்மறையாகத் திரும்பலடைந்து நடுத்தர காலத்தில் 5 சதவீத இலக்கிடப்பட்ட மட்டத்தினை நோக்கி ஒருங்கிணையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-8)

# பதியப்படாத கைத்தொலைபேசிகளை கண்காணிக்க புதிய மென்பொருள்

(கொழும்பு)

இலங்கையில் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல், பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசிகளை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனுமதி அற்ற கையடக்கத் தொலைபேசிகள் பயன்படுத்துவதைத் தடுக்க புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு கையடக்க தொலைபேசிகளையும் கொள்வனவு செய்ய வேண்டாம் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் பந்துல ஹேரத் தெரிவிக்கையில், எங்கள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படாத எந்தக்கையடக்க தொலைபேசிகளையும் வாங்க வேண்டாம் என்று பொதுமக்களை நாங்கள் தயவு செய்து கேட்டுக்கொள் கிறோம். அங்கீகரிக்கப்படாத கையடக்கத் தொலைபேசிகளால் நமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள சட்டவிரோத நடவடிக்கைகளை குறைப்பதும், நாட்டில் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துபவர்களை பாதுகாப்பதும் இதன் நோக்கமாகும். இது அங்கீகரிக்கப்படாத கையடக்கத் தொலைபேசிகள் மூலம் நடத்தப்படும் சமூக விரோத செயல்களையும் குறைக்கும். அத்துடன் கையடக்க தொலைபேசிகள் மூலம் சட்டவிரோத பரிவர்த்தனைகளில் ஈடுபடும் நபர்களை அடையாளம் காண முடியும்.

அதன்படி, சந்தையில் சட்டப்பூர்வ கையடக்கத் தொலைபேசிகளின் பெருக்கம் காரணமாக எதிர்காலத்தில் விலை கள் குறைய அதிக வாய்ப்பு உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# சா/த பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியீடு

(கொழும்பு)

2024 (2025) ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அதன்படி, மார்ச் 17ஆம் திகதி தொடங்கி ஒன்பது நாட்கள் நடைபெறும் இந்தத் தேர்வு மார்ச் 26ஆம் திகதி முடிவடைகிறது.

பரீட்சை அட்டவணையை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலகிருஷ்ணன் ரி-20 தொடர்-2025

# விக்டோரியன்ஸ் அணி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி



பாலகிருஷ்ணன் ரி-20 தொடரில் விக்டோரியன்ஸ் அணி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் 5 ஆவது தட வையாக நடத்தி வரும் பாலகிருஷ்ணன் ரி-20 தொடரில் 3 ஆவது போட்டி கடந்த சனிக்கிழமை அன்று விக்ரோரியன்ஸ் அணி, ஸ்ரான்லி அணியுடன் முதலாவது சுற்றில் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியன்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களை பெற்றனர்.

விக்ரோறியன்ஸ் அணி சார்பாக குகசாந்தன் ஆட்டமிழக்காது 45 பந்துகளில் 59, கிஸாந்தன் 17 பந்துகளில் 34, பிரசாந்தன் 14 பந்துகளில் 22 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ஸ்ரான்லி அணி சார்பாக விதூஸன் 4 ஓவர்களில் 38 ஓட்டங்களைக் கொடுத்து 2, விதுசான் 22 ஓட்டங்களைக் கொடுத்து 1, சுதன்ராஜ் 28 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.


பதிலிற்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 4 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 103 ஓட் டங்களை பெற்றனர்.

விதூஸன்-21, சத்தியப் பிரசன்னா 18, விதுசாந்-14 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் விக்ரோறியன்ஸ் அணி சார்பாக குகசாந்தன் 11 ஓட்டங்களை கொடுத்து 3, பிரியங்கன் 12 ஓட்டங்களைக் கொடுத்து 1, பிரிசாந்தன் 13 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் விக்ரோறியன்ஸ் அணி 5.27 புள்ளிகளையும் ஸ்ரான்லி அணி 1.63 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (6-8)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1950 - 10 - 18 | 2025 - 01 - 29 |

# செல்லப்பா சாம்பசிவம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சாம்பசிவம் அவர்கள் நேற்று 29.01.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - கமலம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சற்குணவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகராசாவின் அன்புச் சகோதரரும் பஞ்சாட்சரம் அவர்களின் மைத்துனரும் கவிதா, சசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுவேந்திரன், ஜெயக்குமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானன், விதுர்ஷனா, டெசிகரன், மோதிலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (30.01.2025) வியாழக்கிழமை மதியம் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 12 ஆம் கட்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


*தகவல் :*
குடும்பத்தினர்

(C-2164)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3295

### செறின்

காதலர் தினம் வேறு வருது லவ் பண்ணலாம் என்று ரொம்ப ஆசையா இருக்கு




ஆனால் பொண்டாட்டியை நினைச்சால் தான் ரொம்ப பயமா இருக்கு என்ன பண்ணலாம்?

### யசோன்

'இல்லை' என்பதற்காக
வாடவும் வேண்டாம்
எல்லாம்
"இருக்கிறது" என்பதற்காக
ஆடவும் வேண்டாம்
நாளை எது
வேண்டுமானாலும் நடக்கலாம்
இல்லாதது கிடைக்கவும்
இருப்பது பறிபோகவும் நிறைய
வாய்ப்புக்கள் உள்ளது.

### ஏஞ்சலின்

என்னைய பெத்து வளர்த்த என்னோட அம்மா அப்பாவாலேயே என்னைய் சமாளிக்க முடியவில்லை




புதுசா புருசன் என்று இடையில வாற ஒருத்தன் எப்படி சமாளிக்கப் போறானோ..

### சாம் பெனிகின்

உன்னுடைய எல்லா செயலுக்கும் எவன் ஆமாசாமி போடுகிறானோ...




அவனே இறுதியில் உனக்கு நாமம் போடுவான்

### கெவின்

ஒரே வார்த்தையில் 'அமைதி, இனிமை, சந்தோசம்' இவை மூன்றும் குறிப்பிடுமாறு எழுத சொல்லி போட்டி ஒன்று நடந்தது. சுமார் 500 பேர் கலந்து கொண்ட போட்டி ... ஒருவர் எழுதிய அந்த வார்த்தை பரிசு வென்றது. நடுவர் ஓடி வந்து அவரை கட்டி பிடித்து கண்ணீரோடு வாழ்த்து சொன்னார். அந்த வார்த்தை என்ன?
என் மனைவி தூங்குகிறாள்.

### பிறிசில்லா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் ஆயுள் காப்புறுதி ஆலோசகர்களுக்கான 15 ஆவது தேசிய மாநாடு 2024 டிசம்பர் 3 ஆம் திகதி ஜய வர்த்தனபுர கோட்டே யில் அமைந்துள்ள Monarch Imperial இல் நடைபெற்றது.

மாநாட்டில் மதிப்புமிக்க ஆயுள் காப்பீட்டுத் தொழிற் துறை விற்பனை விருதுகள் - 2023 ஆயுள் காப்பீட்டுத் துறையில் ஒப்பற்ற ஆற்றல் கொண்ட 32 திறமையா ளர்களுக்கு வழங்கப்பட்டன.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொரு பாற்
கோடாமை சான்றோர்க்கணி



## கலாநிதி தம்பிஜயா கலாமணி

திதி – பூர்வபக்கப் பிரதமை

வையத்துள் : 12.11.1951
வானகத்துள் : 09.02.2024

மண்குளிர்ந்த ஒரு கார்த்திகை நன்னாளில் விடியல் வேளையில் நிகழ்ந்தது உன் ஜனனம். நீ தவழ்ந்து தளிர்நடை நடந்து ஓடியாடி கல்வி கேள்விகளில் நன்மகவாய், அறிவாற்றல் நற்பண்புகளோடு ஆன்மீக வழித்தோன்றலாய் அல்வையில் தடம் பதித்தாய். நின் வழித்தடங்களைத் தொட்டுப் பார்க்கின்றோம். எங்கும் குற்றம் இல்லை. மாசற்ற சோதியே! மங்காத எம் மணிவிளக்கே, கல்வி புலமையாளரே, ஆய்வுக் கருமூலமே, கலைகளின் வித்தகரே, இலக்கியச் செம்மலே! இனிய மொழி பேசும் இன்னிசை நாடக வல்லோனே! நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என வாதிடும் தருமியே, உயர் குணங்களோடு வாழ்ந்த உத்தமரே, கண்ணிமைக்கும் நேரத்தில் கண்தூரம் சென்றுவிட்ட துயரை ஆற்றவழி தெரியவில்லை. எங்கள் அருகிருக்கும் பாலகணபதி, எங்கள் குலதெய்வம் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் அருளிய தவப்பேறே, நின்தாள் பணிந்தோம். நினைவிருக்கும் வரை பரம் பொருளாய் மறவாது நினைந்திருப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**01.** ஒரு பிறவிக் கலைஞனாக, மாணவர்கள் மனங்களை அறிந்து கற்பிக்கும் நல் ஆசிரியராக, வாண்மைமிக்க நல்ல பல ஆசிரியர்களை உருவாக்கிய ஓர் ஆசிரியக் கல்வியியலாளனாக, ஒரு சமூகத்தைச் செதுக்கி அதனை உயர்நிலைக்குக் கொண்டு வந்த சமுதாயச் சிற்பியாக, உளவியல், வாழ்வியல், கல்வியியல் சார்ந்த கருத்துக்களைத் தன் படைப்புகளின் ஊடாக வெளிக்கொணர்ந்த ஆக்க இலக்கியக் கர்த்தாவாகப் பலவழிகளில் கலாநிதி கலாமணியுடைய பரிமாணம் விரிந்தது.
**- பேராசிரியர் சிறிசற்குணராசா**

**02.** கலாநிதி த. கலாமணி பட்டம்பெற்று வந்ததின் பின்னர்தான் அவருடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. கலாநிதி சிறந்த பாடகர், நல்ல நடிகர், கவிதை, சிறுகதை எழுதியவர், சிறந்த ஆய்வாளர், விமர்சகர், கல்வியியல் துறையில் கனதியான ஆய்வுகளைச் செய்தவர். மற்றவர்களின் மனம் நோகப் பேசாதவர். மனிதம் பேணியவர். அவரது குணவியல்புகளை இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம்.
**- பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா**

**03.** தமது பட்டப்படிப்புக்குரிய சிறப்புத்துறையாக அவர் இயற்பியலைத் தெரிந்தெடுத்தார். பெரும் விஞ்ஞானத் தத்துவங்கள், இயற்பியல்துறையிலிருந்து தான் மேற்கிளம்பின. அத்துணை ஆற்றலும் வலிமையும் அந்த புலமைத்துவத்துக்கு உண்டு. விஞ்ஞானத் தத்துவங்களுக்கும் கல்வி மெய்யியலுக்குமிடையே இணைப்பை நிலை நிறுத்தி, தமது புலமை நெடும் பயணத்தை தொடர்ந்து தமிழுக்கு வலிமை சேர்த்தவர். தமக்குரிய கலாநிதிப் பட்டத்தோடு நின்று விடாது, தொடர்ந்து கற்றுக் கொள்ளும் புலமையாளராய் மாணவர்க்கு வழி காட்டியவர். அவரிடத்துக் காணப்பெற்ற இருமொழிப் புலமை, கல்வி நிகழ்த்துகையில் சுவையையும் ஆழத்தையும் நிகழ்நிலைப்படுத்தலையும் உயர்வடையச் செய்தன.
**- பேராசிரியர் சபா.ஜெயராசா**

**04.** கலையுலகிலும் கல்வியுலகிலும் சமதையாக கோலோச்சிய ஒருவர் என்றால் அது அமரர் கலாமணி சேருக்கே அதிகம் பொருந்தும். உடல் சோர்ந்திருந்த போதிலும் கற்பிப்பதில் என்றும் சோடை போனதில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், வவுனியா வளாகம் என எல்லா இடத்திலும் நேரடியாகச் சென்றும் நிகழ்நிலைத் தொழில்நுட்பத்துக்கூடாகவும் விரிவுரைகளை எடுத்தார். சேரின் கற்பித்தல் திறத்தை அவருடைய மாணாக்கர் 'வழி' கேட்கும் போது சகபாடி என்றவகையில் பெருமையாக இருக்கும்.
**-பேராசிரியர் கி.விசாகரூபன்**

**05.** கலாநிதி த. கலாமணி அவர்களின் கற்பித்தல் மிகவும் ஆழமானது. பொருட் செறிவுடையது; கவர்ச்சிகரமானது என்பது அவருடைய மாணவர்களின் கருத்தாகும். கல்வி உளவியல், புள்ளி விபரவியல், ஆராய்ச்சி ஆகிய துறைகளிலே கற்பித்தலில் ஈடுபட்டவர். கல்வி ஆராய்ச்சித்துறையில் இவருக்கிருந்த அறிவும் அனுபவங்களும் கல்வி மாணி, கல்வித்தத்துவமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களுக்கான ஆய்வினை மேற்கொள்வோருக்கு சிறப்பான வழிகாட்டல்களை வழங்கின. தமிழ்க்கல்வியியலாளர் மத்தியில் ஆய்வுத் துறையில் கலாமணிக்கு ஒரு தனியிடம் இருந்தமை குறிப்பிடத்தக்கது"
**-பேராசிரியர் மா. கருணாநிதி**

**06.** கற்பித்தல், புதியனவற்றை தேடுதல், பெற்ற அறிவை பகிர்தல், புத்தாக்கச் செயற்பாடுகளில் மூழ்குதல், மாணவர் மேம்பாடு சார்பாக சுயநலமற்ற ஈடுபாடு, மொழிவள விருத்தியில் அதீத ஆர்வம் என கலாமணியின் ஆற்றல்களையும் திறன்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம். வெளி உலகைப் பொறுத்தவரை தலை சிறந்த மேடைக் கலைஞனாக, கலைப்படைப்பாளனாக, ஒரு சிறந்த விமர்சன ஆய்வாளராக, தேவைப்படுமிடத்து ஓர் ஆலோசகராக வாழ்ந்து காட்டியவர்"
**- பேராசிரியர் க.சின்னத்தம்பி**

**07.** கலாநிதி த.கலாமணி வெறும் அறிவார்ந்த கல்வியியளானுக்கு அப்பால் அவரது அறிவுருவாக்கம், உத்வேகம், இரக்கம், கற்பித்தலுக்கான பேரார்வம், ஆய்வு தொடர்பான இயல்பாற்றல் மற்றவர்களுக்கு உதவுவதற்கான இடைவிடாத நாட்டம், கலையாட்சி, விருந்தோம்பல் ஆகியவற்றின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தவர்.
**- கலாநிதி சு.பரமானந்தம்**

**08.** கலாநிதி தம்பிஜயா கலாமணி அவர்கள் விஞ்ஞான ஆற்றலுடன் கலையாற்றல்களும் கொண்டவர். இதற்கு அவரது பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு என்பன துணை புரிந்துள்ளன. அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியலைச்சிறப்புப் பாடமாகக் கொண்டு விஞ்ஞான மாணிப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். அவுஸ்திரேலியாவின் வொலோங்கொங் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் கலாநிதிப்பட்டத்தைப்பெற்றுக் கொண்டார். தனது பாடத்துறை மற்றும் தொழிற்துறைகளுக்கு அப்பால் பல்வேறுபட்ட ஆளுமைத்திறன்கள் கொண்டவர். இலக்கியம், இசை, நாடகம், இலக்கியப்பதிப்பு மற்றும் திரைப்படம் போன்ற பல்வேறு துறைகளில் தனது தடத்தைப் ப்தித்தவர்.
**-கலாநிதி ஆ.நித்திலவர்ணன்**

(787)

கலைஅகம், அல்வாய் குடும்பத்தினர்

# இராசிபலன்

30.01.2025
தை 17, வியாழக்கிழமை
பிரதமை முன்னிரவு 6.12மணிவரை

திருவோணம் மு.ப 9.01 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூசம்

வளவன்

**மேஷம்** – கனவு பலிதம் உண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**கடகம்** – வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்குத் திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

**துலாம்** – நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்க முற்படுவீர்கள், தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**மகரம்** – பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியம் ஒன்று நடைபெற்று மகிழ்ச்சி தரும், உடல்நலம் சீராகும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

**ரிஷபம்** – அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், மனக்குழப்பம் தீர்ந்து மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** – சுவாரஷ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தொழில்நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் நன்மை தரும், போசனசுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** – பொது வாழ்வில் வீண் பழிகள் வந்துவிடாமல் பார்த்துக்கொள்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி** – சுறு சுறுப்புடன் செயற்படுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உண்டாகும், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** – எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உங்களின் வார்த்தைகளைப் பலரும் கேட்டு நடப்பர், செய்தொழிலில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் வேண்டும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மீனம்** – கூட்டு முயற்சிகள் வெற்றி பெறும், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

வயதானவர்களுக்கு அவர்கள் கேட்பதற்கு முன்னால் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதந்திர நாளை கரிநாளாக அனுஷ்டிக்க அழைப்பு

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா தேசத்தின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுசரிக்குமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரியக்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

அதன் தலைவர் அருட்பணி. து.ஜோசப்மேரி மற்றும் அதன் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோர் இணைந்து நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 4 ஆம் திகதியினை ஸ்ரீலங்கா தேசம் தமது சுதந்திர தினமாக கொண்டாடி வருகின்றது. ஆயினும் அன்றைய தினமே பறிக்கப்பட்ட தமிழர் தேசத்தின் இறையாண்மை, ஆங்கிலேயரிடமிருந்து சிங்கள பேரினவாதிகளுக்கு கைமாற்றப்பட்ட தினமாகும்.

இன்று தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சி ஏறி உள்ள ஜனதா விமுக்தி பெரமுன எனும் சிங்கள அடிப்படைவாதக் கட்சி தம்மை மாற்றத்தின் நாயகர்களாக காட்ட முற்பட்டாலும் அவர்களின் உண்மை முகம் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டே இருக்கின்றது.

சிங்கள பேரினவாதத்தால் இனத்தின் மீதான இன அழிப்பினை மறுதலித்து, அலட்சியத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் இறந்து விட்டதாகவும் அரசியல் கைதிகள் யாரும் இல்லை என முன்னைய அரசாங்கங்களைப் போலவே தமிழ் மக்களின் போராட்டத்தினை பயங்கரவாதமாகவே சித்தரிக்க முயல்கின்றனர்.

மேற்கூறிய விடயங்களை கருத்தில் கொண்டு வரும் ஸ்ரீலங்கா தேசத்தின் சுதந்திர தினத்தை தொடர்ச்சியாக தமிழர் தேசம் கரிநாளாக அனுசரித்தது போலவே இம்முறையும் அனுசரிக்க பொதுவிடங்கள், கடைகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், வீடுகள் என்பவற்றில் கறுப்பு கொடிகளை கட்டி உங்களின் எதிர்ப்பினை வெளிப்படுத்து மாறுஅறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. (6-8)

# யாழில் 40 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்பு

## 5 இளைஞர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் 40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களிடம் இருந்து, 40 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைதான ஐந்து இளைஞர்களையும் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-8-33)

# உரிய அனுமதியின்றி 16 பனை மரங்கள் தறிப்பு

(சாவகச்சேரி)

உரிய அனுமதியின்றி சட்டவிரோதமாக பனை மரங்களைத் தறித்த ஆலய நிர்வாகம் மற்றும் தனியார் மீது பனை அபிவிருத்திச் சபையால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில் அனுமதியின்றி 10பனை் மரங்களைத் தறித்த ஆலய நிர்வாகம் மீதும் அதேவேளை தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னாலைப் பகுதியில் சட்டவிரோதமாக 6 பனை மரங்களைத் தறித்த தனியார் ஒருவர் மீதும் பொலிஸ் நிலையங்களில் பனை அபிவிருத்திச் சபையால் முறைப் பாடு செய்யப்பட்டிருப்பதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார். (6-8-30)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபபூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம்வரும் காட்சி இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (6-8)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தாளையடி பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான புனராவர்த்தன ஸப்தாதச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதமகுரு முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தகுருக்கள் அருளாசியும் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் ஆசியுரையும் வழங்கவுள்ளனர். (6-8)

(யாழ்ப்பாணம்)

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தம நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹாகும் பாபிஷேக விஞ்ஞாபனம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அதனையொட்டி எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம் பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

# தரம் 5 புலமைப்பரிசில் - 2024 பரீட்சை பெறுபேறுகள்

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

ப.பிரசோதன்- 186, க.சிவதாரணி-180, பி.அருணியன்-178, ச.ஹிருஷிஹன்-175, சு.தட்சரா-175, ச.பிரனீஷ்-175, கு.அதிரா-175, ச.சிவசரணிகை-175, நி.அக்ஷனா-173, த.யானுகேஷ்-173, ந. சாகித்தியன்-172, சு.நதீஷ்ஷன்-172, உ.அட்ஷரன்-170, செ.பிரித்திகா -169, ஸ்ரீ.கிருஷிகா-168, சு.காவியா-168, பா.ஆதேஷ்-167, ச.அட்சயன்-166, ச.லைனிசாய்-166, உ.ஷியானா-166, ஸ்ரீ.ஹர்ஷிகா-166, உ.சாய்கார்த்திகன் - 166, ச. அக்ஷ்யன்-166, ஜீ.பெனிக்ஸ்சன்-164, க.லட்சயா-164, மு.நிஷாலி-164, சு.சதுர்யா-164. தி.ஹனுக்ஷா-163, சி.அஜீஷ்-163, வி.மதுரகன் -163, ரா.விதுலாஷ்-162, பி.கவினயா-162, தி.திஷாந்த்-162, ச.சகிஸ்வின் -162, ச.திஷ்வாக்-162, து.அர்ஜுன்-161, பா.மகேஸ்வரநாதசர்மா -160, ந.நிஜந்தன்-160. ந.அனுஜித்-160, ம.கேசரன்-160, ம.பிரஷ்ணவி-160, செ.ஹரீனி-159, ர.ஆராதனி-159, க.ஷெரின்பெனிக்டா-159, பி.யுககாந்த்-159, ஜீ. ராஹல்வியா-158, ஜீ.நிருஷி-158, மு.நதீஷ்-158, த.கபீர்னா-157, சி.அர்சாயா-157, சு.அஷின் -157, ஜெ.லயக்சயா-157, ரூ.கீர்த்தனா-157. அ.ஆதவ்-156, ச.தர்மிகன்-156, க.டக்ஷன்-156. ச.அஸ்வினி-156, அ.அஸ்விதா-156, சி.கவிதன்-155. சு.ஜீகர்தன்-155, சு.பவதாரணி-155, ய.டக்ஷிகா-155, வி.சஞ்சனா-155, ஸ்ரீ. டானியா-154, அ.அனிகா-154, ய.கவிஷா-154, அ.பிரணேஷ்காந்த்-154, வி.பிருந்தாபன்-154. சு. தர்மிகா-154. ம.ஜருஷா-154, அ.சாயார்ச்சாயன்-154. ம.கபிலேஸ்-153. கோ.கவிஷ்ணன்-153. கே.ஷரன்-153. ந.கஜதர்ஷி-153, உ.தரநேகா-152, ஜெ.பானுஷா-152, ர.சஜீவ்-152, தி.திஷிகேசிகன்-151, வ.ஹர்னிஷா-151, ம. அர்த்தனன்-150, பி.மிருணாலினி-150, கோ.ஜானுகா-150 தி.நிஸ்மிதன்-150, எ.சௌமியன் 150, செ.சரண்-150, வ. திவானுஜன்-149, கே.இலக்கியன்-149, சி.ஹரிஷணன்-149, தி.விஷ்ணுஜன்-148, ப.மாதுர்யா-148. ஜெ.கிருத்திகேசன்-148, கோ.ஹரித்துவரன்-147. கே.வர்ஷாயினி-147. ரா.நிலக்ஷி-147. அ.யஸ்வின்யா-147. அ.அனுஸ்ரி-147. க.அபிஷாலினி-147. யோ.சுரபிஹா-147. நி.கவிநயா-146, க.சர்வின்-146, கோ.கவிஷா-146. ர.தஷ்வின்-145. க.சாருஜன்-145, பி.விபிஷா-145, ப.யாஷானா-145, செ.பிரதிக்ஷா-145, ப.சாய்ஷரன் - 145, ச.ஹரிஷணன்-145, ப.தாரிகன்-145. வெ.அபூர்வா-145, செ.அட்சயா-144, அ.ஷர்மிகா-144, செ.மயூரன்-143, பி.அபிசயன் 143, க.கியோனா-143, சு. ஜாதர்தன்-142, மு.பாத்திமா அனுசா-142, க.தபிக்னா-142, ஜெ.துளசிகன்-142, பி. சாகித்தியா-142, செ.அபிநயா -142, சு.அஷ்மிதா-142. ஜ.அதுஜான் - 141, ந.அருஜனன்-141, க.டினுஜன்-141, சி.ரமேசன்-141, சி.அக்ஷயா-140, அ.திஷ்வின்-140, பி.தெர்ச்சிகன்-140. ஜெ.அபிநயன் - 140, வி.பிரணேத்தன்-140, உ.பவரஞ்சா-140, ஸ்ரீ.ஆரணன்-139

## யா/மகாஜனக் கல்லூரி-தெல்லிப்பழை

பெ.சாம்ஆதவன் -175, ர.பவினேஸ்-173, கு.இந்துஜா-168, பா.லக்ஸ்மவர்ணன்-167, அ.நிகாஷன்-166, யு.ஆருத்தன்-166, கௌ.ஹரிணிகா-163, ரா.சயந்திகா-162, ய.தபிசாந்-160, ஸ்ரீ.ஸ்ரீசுபகா-160, உ.பிறவின்-160, க.கோசிகன்-159, கி.ஹிசாணன்-156, அ.தனக்ஷிகன்-155, வா.ஜிசாந்த்-155, கி.கோணேசன்-154, ச.ரஷிகா-154, சு.கனுராஜ்-153, சி.பிறிதிகா-153, சு.கபீஸ்-153, ப.ஆர்வலன்-151, தீ.சஸ்மிகா-151, க.ரிஷானி-151, பே.ரவின்கெய்ஷன்-149, ம.ஷியாம்-149, க.பிரணவன்-149, ச.அஸ்வியா-148, ம.கரணிகா-147, டி.பார்கவி-146, அ.ஆதனா-144, பு.கம்சாயினி-144, கி.சஞ்ஜேய்-143, சு.கேசவி-143, ஜெ.திலக்ஷிகா-143, ச.அஸ்வின்-140, பா.தருநிகன்-139, ஜெ.ஸரோன் எஸ்ரா-139

## மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

கி.அக்ஷயன்-186, சு.அக்ஷயா-166, வ.ராகவன்-165, சு.சுபவீன்-165, பி.ஸ்ரீஸ்னியா-161, ப.யோஸ்வென்-155, ஜெ.ஜஸ்மிதா-154, த.துபிசனா-151, க.டனுசிகா-150, ஜெ.டிஸ்மியா-150, சு.அபிஷாலினி-147, க.கபிர்சிகா-144, த.தபிசனா-141, யோ.லோசனா-139

## யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

த.தசாயினி-144, பி.பவின்சிகா-141

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைய எந்தப் படகுகளுக்கும் அனுமதியில்லை

## பாதுகாப்பு அமைச்சு அதிரடி

(கொழும்பு)

**இலங்கை கடற்பரப்புக்குள் வரும் எந்தவொரு படகுக்கும் இடமளிக்க முடியாதென்றும் அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்சல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார்.**

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், அது இந்திய படகாக இருந்தாலும் சரி வேறு நாட்டின் படகாக இருந்தாலும் சரி கட்டாயம் கண்காணிக்கப்படும்.

ஆயினும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது துரதிஷ்டவசமாக துப்பாக்கி இயங்கியதால் இந்திய மீனவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-8)


**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(759)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974**


## அத்தியாவசியப் பொருட்களுக்கு நிர்ணய விலைகள்

(கொழும்பு)

நுகர்வோர் விவகார அதிகார சபையிடமிருந்து பல அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான மதிப்பிடப்பட்ட சில்லறை விலை வரம்புகள் வெளியிடப்பட்டுள்ளன.


இதன்படி வெள்ளை முட்டை, பால்மா, கோதுமை மா, சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு உள்ளிட்ட பொருட்களுக்கு மொத்த மற்றும் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வெள்ளை முட்டையின் விலை 28-35 ரூபாவாகவும், 400 கிராம் பால்மாவின் விலை 870-1,000 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் கோதுமை மா மொத்த விலை 155-163 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 228-245 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பருப்பு 275-293 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 160-180 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு கிலோகிராம் வெள்ளை அரிசி 210-220 ரூபாவாகவும், உள்ளூர் அரிசி 220-230 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசி 210-220 ரூபாவாகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி-8)


**மணிவிழா வாழ்த்து**



திரு.
**கணேசலிங்கம் செல்வராஜா**

B.A, P.G.D.Ed, Sp.Trd, Science, N.C.T (Electrical)

ஆசிரியர் சேவை - 36 வருடங்கள்
(20.01.1989 - 29.01.2025)

யா/உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை
(14.01.2020 - 29.01.2025)

எமது பாடசாலையில் சேவையாற்றி இன்று 30.01.2025 ஓய்வுபெற்று செல்லும் ஆசிரியரை நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(3265)

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை.



**மானிப்பாய் பரிஸ்**
**ப.நோ.கூ.சங்கப் பணிநிலை வெற்றிடங்கள்**

**எழுதுநர் 302/16**

**சம்பள அளவுத்திட்டம்** :- 16975-135X10-150X10-19825/=

**தகைமை :**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி

**கிளை முகாமையாளர் 208/16**

**சம்பள அளவுத்திட்டம்**:- 16975-135X10-150X10-19825/=

**தகைமை:**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு கால அனுபவம்/

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

**விற்பனை உதவியாளர் 307/17**

**சம்பள அளவுத்திட்டம்** :- 16515-130X10-145X10-19265/=

**தகைமை:**

அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/ 08 ஆந் தர கல்விச் சான்றிதழ்

**விண்ணப்ப முடிவுத் திகதி: 15.02.2025**

**குறிப்பு:-** இச் சம்பளத் திட்டத்துடன் மேலதிகமாகக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபத்திற்கு அமைவாக ரூபா 15 000/= வழங்கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்**

அ. வயதெல்லை 18-45 வரை (கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு வயது விலக்களிக்கப்பட்டுள்ளது)

ஆ. கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபாரிசு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

இ. சங்க எல்லைப் பரப்பினுள் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஈ. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தே.அ.அ.இல, பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பன உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு அல்லது சங்கத்தின் மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

உ. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிகராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

ஊ. விண்ணப்பங்கள் தலைவர் மானிப்பாய் பரிஸ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பொன்னாலை வீதி மானிப்பாய் எனும் முகவரிக்கு எதிர்வரும் 15.02.2025 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எ. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

ஏ. சங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் பிணையினை செலுத்தத் தயராக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
**மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.சங்கம் (வ-து).** (சி-2156)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கும்பமேளா சன நெரிசலில்

# 15 பேர் உயிரிழப்

## உத்தரப்பிரதேசத்தில் சோக

**(டில்லி)**

**இந்தியாவின் மகா கும்பமேளா கொண்டாட்டத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**







12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பமேளா கொண்டாட்டமானது உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் கடந்த ஜனவரி 13 ஆம் திகதி ஆரம்பமாகியது.

40 நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்வின் போது, மூன்று நதிகள் (கங்கை, யமுனை, சரஸ்வதி) சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட உலகம் முழுவதும் இருந்து கோடிக்கணக்கான பக்தர்கள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

இதுவரை 15 கோடி பேர் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் நேற்று தை அமாவாசையை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இதில் கூட்ட நெரிசலில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளதோடு பலர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காயமடைந்தவர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றதாகத் தகவல் வெளியாகியுள்ளதுடன் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## தென்கொரிய விமானம் தீப்பிடிப்பு வெளியேற்றப்பட்ட 176 பயணிகள்



(சியோல்)

தென் கொரியாவில் 176 பயணிகளுடன் புறப்படத் தயார் நிலையில் நின்ற விமானம் தீப்பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிம்ஹே விமான நிலையத்தில் பயணிகள் விமானம் ஒன்றே இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

எனினும் பயணிகள் 176 பேரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் 169 பயணிகள் மற்றும் ஏழு பணியாளர்களுடன் 176 பேரை ஏற்றிக் கொண்டு புறப்படத் தயார் நிலையில் இருந்தபோதே தீப்பிடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

## 120 நாட்கள் நீருக்கடியில் வாழ்ந்து உலக சாதனை



(பெர்லின்)

ஜேர்மனியைச் சேர்ந்த ருடிகர் கோச் என்ற நபர் 120 நாட்கள் நீருக்கடியில் வாழ்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ல் சிக்கி

# ப்பு!

## கம்





நீருக்கடியில் நீண்ட காலம் வாழ்ந்தவர் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளார்.

59 வயதான குறித்த நபர் பனாமாக் கடலுக்குள் 30 சதுரமீற்றர் கொண்ட காப்ஸ்யூல் பாணியில் உரு வாக்கப்பட்ட வீட்டில் கடந்த 120 நாட்களாக வசித்து வந்துள்ளார்.

முன்னதாக புளோரிடா குளத்தில் நீருக்கடியில் பல்கலைக்கழகப் பேராசிரிய ரான ஜோசப் டிதுரி என்பவர் 100 நாட்கள் தங்கியிருந்தார்.

அந்தச் சாதனையை முறியடித்து ருடிகர் கோச் கின்னஸ் சாதனையில் இடம் பிடித்துள்ளார். (நி-8)

# அமெரிக்காவுக்கு தீங்கு விளைவிக்கும் நாடுகளுக்கு வரி விதிக்கப்படும்

## ட்ரம்ப் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

'அமெரிக்காவுக்குத் தீங்கு விளைவிக்கும் நாடுகளுக்கு வரி விதிக்கப்படும்' என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறை பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், பதவியேற்ற முதல் நாளிலேயே பல அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்தார். குறிப்பாக 'உலகின் உற்பத்தி மையமாக மீண்டும் அமெரிக்காவை மாற்றுவதற்குத்தான் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீத வரி, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் பொருட்களுக்கு 25 சதவீத வரி என வரிசையாக வரிகளை விதித்த ட்ரம்ப், நட்பு நாடான இந்தியாவுக்கு 100 சதவீத வரி விதிப்பதாகவும் எச்சரித்துள்ளார்.

மேலும் பிரிக்ஸ் அமைப்பில் உள்ள நாடுகள் டொலருக்கு மாற்றாக வேறு நாணயத்தில் வர்த்தகம் செய்து, டொலரின் மதிப்பைக் குறைக்க நினைத்தால், அந்த நாடுகளுக்கு 100 சதவீத வரி விதிக்கப்படுமென ட்ரம்ப் கூறியிருப்பது, இந்தியாவுக்கு எதிரான எச்சரிக்கையாகவே கருதப்படுகிறது.

இந்நிலையில், குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் முன்னிலையில் ட்ரம்ப் நேற்று முன்தினம் உரையாற்றிய போது" அமெரிக்காவுக்கு தீங்கு விளைவிக்கும் வெளிநாடுகள் மற்றும் வெளிநாட்டவர்கள் மீது வரிகளை விதிக்க தாம் தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் தங்கள் நாட்டுக்கு நல்லது செய்ய விரும்பினாலும் அது அமெரிக்காவுக்கு தீங்கு விளைவிக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் மிகப்பெரிய அளவில் வரி விதிக்கின்றன எனவும், ஆனால் இனி அப்படி நடக்காது எனவும் அமெரிக்கா முதன்மையானது என்பதே எனது கொள்கையாக இருக்கும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (நி-8)

### தொடர் போராட்டங்களால்

# செர்பியா பிரதமர்

## இராஜினாமா செய்ய முடிவு

(செர்பியா)

மக்களின் தொடர் போராட்டம் காரணமாக, செர்பிய பிரதமர் மிலோஸ் வுசெவிக் தனது பதவியை இராஜினாமா செய்யவிருப்பதாக அறிவித்துள்ளார்.

தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்று செர்பியா. இது, ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, அல்பேனியா, மெசிடொனியா ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. அதன் பிரதமராக மிலோஸ் வுசெவிக் உள்ளார். இந்த நிலையில், தனது பதவியை இராஜினாமா செய்ய விருப்பதாக அறிவித்துள்ளார்.

செர்பியாவின் வடக்கு நகரமான நோவிசாட்டில் உள்ள ரயில் நிலையத்தின் மேற்கூரை, கடந்த நவம்பர் மாதம் 1 ஆம் திகதி, பெயர்ந்து விழுந்தது. இதில் 15 பேர் உயிரிழந்தனர். அந்த ரயில் நிலையத்தில் நடந்த சீரமைப்புப் பணிகளில் ஊழல் நடந்திருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதனை கண்டித்து நாடு தழுவிய போராட்டம் வெடித்தது. இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் உட்பட பல்வேறு அரச அதிகாரிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதற்கிடையே, ஊழல் குற்றச்சாட்டு விவகாரத்தில் செர்பியா பிரதமர் மிலோஸ் வுசெவிக்கை கண்டித்து பொது மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர். தொடர்ந்து அவருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

இந்த நிலையில், செர்பியா பிரதமர் மிலோஸ் வுசெவிக், தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

பிரதமரின் இராஜினாமாவை செர்பியா பாராளுமன்றம் ஏற்றுக்கொண்ட பிறகு, அடுத்த 30 நாட்களுக்குள் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)



# சீனப் புத்தாண்டு

## கோலாகலமாக ஆரம்பம்



(பீஜிங்)

ஆசியா மற்றும் உலகம் முழுவதும் உள்ள சீனர்கள் குடும்பத்தினர், நண்பர்களுடன் பிரார்த்தனைகள் மற்றும் ஏராளமான உணவுகளுடன் சீனப் புத்தாண்டை வரவேற்றுள்ளனர்.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு விலங்கின் பெயர் வைக்கப்படும் நிலையில், இவர்கள் டிராகன் ஆண்டுக்கு விடை கொடுத்து பாம்பு ஆண்டை வரவேற்றுள்ளனர்.

"வசந்த விழா" என்றும் அழைக்கப்படும் லூனார் புத்தாண்டு அல்லது சந்திரப்புத்தாண்டு நேற்று 29 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி வரை சீன மக்களால் கொண்டாடப்படுகிறது.

சீனாவிலும் பிற இடங்களிலும் உள்ள சீன மக்கள் இந்த ஆண்டின் மிக முக்கியமான பண்டிகையாகக் கருதுகின்றனர்.

இந்த புத்தாண்டு கொரியா, வியட்நாம், தாய்லாந்து மற்றும் சிங்கப்பூர், ஆசியாவின் பிற பகுதிகளிலும் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது.

புத்தாண்டின் முதல் இரண்டு நாட்களில் குடும்பத்தினரும் நண்பர்களும் ஒன்று கூடி விருந்து, பரிசுகள் மற்றும் சிவப்பு கடதாசி உறைகளில் பணம் போன்றவற்றை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை

# அதிகரிக்கக் கூடும்

### சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம்

(கொழும்பு)

**உலகளாவிய ரீதியில் புதிதாக அடையாளம் காணப்படும் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை 2040 ஆம் ஆண்டளவில் 30 மில்லியனாக அதிகரிக்கக் கூடுமென சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச ரீதியாக 2020ஆம் ஆண்டில் 19.3 மில்லியனாக இருந்த புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை, எதிர்வரும் 15 வருடங்களில் 30 மில்லியனாக அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் புற்று நோய் தொடர்பான தேசிய தரவுகளுக்கு அமைய நாட்டில் பதிவாகும் மரணங்களுக்கு நான்காவது பிரதான காரணியாகப் புற்றுநோய் விளங்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் மாத்திரம் 37, 753 புற்றுநோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய புற்று நோய் தரவுகள் தெரிவிக்கின்றன.

அவர்களில் அதிகளவானோர் பெண்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

# இ.போ.ச தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமல் சிறிவர்தன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ரமல் சிறிவர்தனவின் இராஜினாமா குறித்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன உறுதிப்படுத்தியுள்ளார்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் செனேஷ் திஸாநாயக்கவும் அண்மையில் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 450 | 500-550 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 1300 | 1000 | 1000 | 950-1100 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 350 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 150-280 | 200 |
| கோவா | 220 | 240 | 200 | 200 | 300 |
| கரட் | 300 | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | 120 | 120 | 150 | 70-80 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 150 | 100-130 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 300 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 380 | 250 | 200 | 300 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 600 | 700 |
| வெண்டக்காய் | 200 | 500 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 180 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 750 | 500 | 600-700 | 800 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 280 | 400 |
| பீற்றூட் | 550 | 400 | 400 | 200-250 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 800 | 800 |
| முருங்கைக்காய் | - | 3000 | 1400 | 2500 | 2000 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 400-450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 300 | 450-500 | 500 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 120 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 200 | 240 | 250 | 100-150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 180 | 150-300 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 600 | 500 | 500-600 | 700 |
| வெங்காயப்பூ | 450 | 280 | 400 | 300 | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 | 160 |

# இன்று ஒரு தகவல்

311



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## தாயன்பு

ஒரு வயதான அம்மா வீதியில் சென்றுகொண்டிருந்தார். அவர் கையிலே எதையோ வைத்துக்கொண்டு அதை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருந்தார். ஒருவர் அவரிடம் போய் கையில் இருப்பது என்ன என்று எட்டிப் பார்த்தார்.

அந்த அம்மாவின் கையில் நான்கு பற்கள் இருந்தது. இவர் ஆச்சரியமாக அந்த அம்மாவைப் பார்த்தார். ஏன் அம்மா உனக்கு என்ன பைத்தியமா? ஏது இந்தப் பற்கள்? இதை எதற்காக கையில் வைத்துக் கொண்டு அலைகிறாய் என்று கேட்டார்.

அதற்கு அந்த அம்மா இதோ பாருங்கள் எனக்கு ஒரு மகன் இருந்தான். அவனை மிகவும் செல்லமாக வளர்த்தேன். அவனைத் தரையிலே நடக்க விடுவதில்லை. எப்போதும் தூக்கி வைத்துக் கொண்டிருப்பேன். அவன் வளர்ந்து பெரியவனாகி பாடசாலை போகும்போது கூட அவன் புத்தக மூட்டையை நான்தான் சுமந்து கொண்டு போவேன். பார்ப்பவர்கள் கேலி செய்வார்கள். படிக்கப் போவது நீயா? இல்லை உன் பிள்ளையா என்று கேட்பார்கள்.

அவன் இன்றைக்கு எவ்வளவோ பெரியவனாகிவிட்டான். வெளிநாட்டில் உத்தியோகத்தில் இருக்கிறான். சமீபத்தில் இங்கே வந்துவிட்டுப் போனான். ஒருநாள் ஏதோ கோபத்தில் என்னை அறைந்து விட்டான். அப்போது இந்த நான்கு பற்களும் விழுந்து விட்டது. இன்னும் விழுந்திருக்கும். ஆனால் பற்கள் தான் இல்லை. என் பிள்ளை அறைந்ததனால் விழுந்த பற்கள் அல்லவா இது. அதனால் தான் இதை எப்போதும் கையில் வைத்துக்கொண்டு ஆசையோடு பார்த்துக்கொண்டிருக்கின்றேன். அவன்தான் வெளிநாட்டுக்குப் போய்விட்டான். அவனைப் பார்க்க முடியாத ஏக்கத்தை நான் இந்தப் பல்லைப் பார்த்துப் போக்கிக்கொள்கின்றேன் என்றார் அந்த அம்மா.

இந்தக் கதை எதற்காக என்றால் தாயன்பு எப்படிப்பட்டது என்பதைப் புரிந்துகொள்வதற்காக. திருமணமான பின்பு தாயை மறந்து விடுபவர்கள் எத்தனை பேர் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய காதில் விழவேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் தகவல்.

ஆனால் ஒரு விடயம் மட்டும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். தாயை மதிக்கத் தெரிந்தவர்கள் தான் வாழ்க்கையில் எல்லா விதத்திலும் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். இன்னுமொரு அம்மா இருந்தார். அவர் தினமும் ஒரு கோயிலுக்கு போவார்.

சாமியைப் பார்த்து கடவுளே நான் இறந்து போனால் நரகத்துக்குப் போக வேண்டும் என்று வேண்டுவாராம். எல்லோரும் சொர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று தானே வேண்டுவார்கள். ஆனால் இந்த அம்மா இப்படி வேண்டுகிறாரே என்று அங்கே இருந்த அர்ச்சகருக்குச் சந்தேகம்.

ஒரு நாள் நேரடியாகவே அந்த அம்மாவிடம் கேட்டார். அதற்கு அந்த அம்மா ஐயா எனக்கு திருமணமாகி குழந்தைப் பாக்கியம் இல்லை. கோயில் குளம் எல்லாம் சுற்றி வந்தேன். நீண்ட நாட்கள் கழித்து ஒரு குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. அவனை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தேன். அதன் விளைவு என்ன என்றால் அவன் மிகவும் மோசமாக ஆகிவிட்டான். கெட்ட பழக்கங்கள் எல்லாவற்றையும் கற்றுவிட்டான்.

அவன் இறந்து போனால் நிச்சயம் அவனுக்கு நரகம்தான் கிடைக்கும். அந்த அளவுக்குக் கெட்டவன் என்று பெயர் வாங்கி விட்டான். எனக்குத் தெரியும் இவனுக்கு நரகத்தில் கூட யாரும் தயவு காட்ட மாட்டார்கள். அதனால் இவனுக்கு முதல் நான் இறந்து நரகத்துக்குப் போய் விட்டால் இவனுக்குப் பணிவிடை செய்யலாம். அதனால் தான் நரகத்துக்குப் போக வேண்டும் என்று நான் தினமும் ஆண்டவனை வேண்டிக்கொண்டிருக்கிறேன் என்று கண் கலங்கிக்கொண்டே அந்த அம்மா சொன்னார்.

அதுதான் தாய் உள்ளம். தாயின் பெருமையை சரியாக உணர்ந்து கொண்டால் அவர்களுக்கு எப்போதும் எந்தக் கஷ்டமும் வராது. இது ஏதோ உபதேசத்துக்காக சொல்லுகின்ற விடயம் இல்லை.

உண்மையான வார்த்தை. இந்த விபரத்தையெல்லாம் நண்பர் ஒருவரிடம் சொன்னேன். அவர் சிறிது நாட்கள் கழித்து என்னைத் தேடி வந்தார். அவருடைய கையிலும் நான்கு பற்கள் வைத்திருந்தார்.

என்ன நடந்தது எதற்கு இந்தப் பற்கள் என்று கேட்டேன். உங்கள் உபதேசத்தை கேட்டுவிட்டு இந்த உலகத்தில் எல்லோரையும் தாயாக நினைக்க ஆரம்பித்து விட்டேன். ஒரு அம்மாவைக் கடைத் தெருவில் பார்த்து தாயே என்று கூப்பிட்டேன். அவர் உடனே பளார் என்று என்னை அறைந்துவிட்டார்.பற்கள் விழுந்துவிட்டது. அதைத்தான் பொறுக்கிக்கொண்டு உடனே உங்களைப் பார்க்க வந்தேன் என்றார். தாயே என்று தானே கூப்பிட்டீர்கள்? அதற்கு ஏன் அறைந்தார் என்று கேட்டேன். நான் தாயே என்று கூப்பிட்டது அவருடைய [illegible] தாயே என்று விழுந்து விட்டதாம் அதுதான் இப்படி [illegible]து என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிய மணல் அகழ்வு

# ஜனாதிபதியுடன் கலந்துரையாட நடவடிக்கை எடுங்கள்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன்ஏற்பாட்டில் பிரதியமைச்சரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கனிய மணல் அகழ்வு குறித்து மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமையினால் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசுவதற்கான நேரத்தை ஒதுக்கி தருமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக, பிரதி அமைச்சரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்கவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது உடனடியாக குறித்த சந்திப்புக்கான ஏற்பாடுகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி முன்னெடுப்பதாக அவர் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாட் பதியுதீன், காதர் மஸ்தான், து.ரவிகரன், பா.சத்தியலிங்கம், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன், முத்து முஹமட் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பிரதேச செயலாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8-285)

# காணிகளை விடுவிக்ககோரி ஆளுநரிடம் மனு கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநருக்கும் மயிலிட்டி கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது மயிலிட்டி கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினரால் வட மாகாண ஆளுநரிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில், ஜே/246 கிராம அலுவலர் பிரிவில் ¾ பங்கு காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஜே/251 கிராம அலுவலர் பிரிவில் ¼ பங்கு காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஜே/248 முற்றாக விடுவிக்கப்படாத நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடுவிக்கப்படாத பகுதிகளில் உடனடியாகக் குடியேறுவதற்கு 550 குடும்பங்கள் தயாராக இருப்பதாகவும் தற்போது இந்தக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து வாடகை வீடுகளிலும் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வருவதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மக்களின் பிரதான வாழ்வாதாரமான மீன்பிடியை முன்னெடுக்க முடியாத சூழல் நிலவுவதாகவும் தமது காணிகளை விடுவித்து தருவதன் ஊடாக வாழ்வதற்கு வழி செய்து தருமாறும் மனுவில் கோரியுள்ளனர்.

சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து 25 வருடங்கள் கடந்துள்ளமையை கருத்திலெடுத்து தமது மீள்குடியமர்வை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் ஏற்கனவே பேச்சுக்கள் நடத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், தொடர்ந்தும் இதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். (6-8)

# வேலையற்ற பட்டதாரிகள் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் யாழில் நேற்றுக் காலை போராட்டமொன்று இடம்பெற்றது.



யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியின் முன்றலில் கூடிய பட்டதாரிகள் சங்கத்தினர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் கவனயீர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

இதன் பொழுது "வேலை வேண்டும் வேலை வேண்டும், பட்டதாரிகளுக்கு வேலை வேண்டும், படித்தும் பரதேசிகளாக இன்றும் தொடரும் அவலம், பல பரீட்சைகளை தொடர்ந்து என்ன பிரயோசனம்" என்றவாறு பல கோஷங்களை எழுப்பிய வண்ணம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் இருந்து யாழ்.நகரினூடாக மாவட்ட செயலகத்திற்கு சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பசுமையை வலியுறுத்தி மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டது.(6-8-33)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 'பச்சிலை' மலர் வெளியீடு



(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வும் "பச்சிலை" மலர் வெளியீடும் பிரதேச சபையின் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலர் திருமதி த.தர்சினி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பங்கேற்ற வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நிகழ்வுகளில் பங்குபற்றியோருக்கான பரிசில்களை வழங்கி வைத்ததுடன் "பச்சிலை" மலரினையும் வெளியிட்டு வைத்தார். இந் நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் த.ஜெயசீலன், கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.சத்தியராகவன், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (6-8)

# கிளிநொச்சிக் குளத்தை சுற்றுலா மையமாக விரிவாக்க ஆராய்வு

(தருமபுரம்)

கிளிநொச்சிக் குளத்தை அண்டிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சிக் குளத்தின் கீழ்ப்புறமாக உள்ள கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கட்டடத்தினை SY NIRO COOL CAFE நிறுவனம் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதிகள் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் முகமாக கிளிநொச்சிக் குளத்தினுள் விசைப்படகு, துடுப்பு படகு ஆகிய பொழுது போக்குச் சேவைகளை நடத்துவதற்கும் அதனை அண்டிய பகுதியினை கவர்ச்சிகரமாக மாற்றி அமைப்பதற்கும் அனுமதி தருமாறு கோரியுள்ளதுடன் குறித்த திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், இப் பிரதேசத்தின் வாழ்வாதாரம் மற்றும் வீதிப் போக்குவரத்து தடைப்படாத வகையில் இதனை வடிவமைக்க வேண்டும்.

மேலும் இப்பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகளை குறைப்பதை நோக்காக கொண்டிருப்பதுடன் எவ்வகையிலும் அதனை அதிகரிப்பதற்கு இடமளிப்பதைக் கொண்டிருக்கக் கூடாது.

இதனுடன் பல திணைக்களங்கள் சம்பந்தப்படுவதால் தங்களது திட்டத்தில் உள்ளடங்குகின்ற விடயங்களை தெளிவாக எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில் அந்தந்த விடயங்களில் திணைக்களங்களுக்குரிய விதிமுறைகளை குறித்த திணைக்களங்கள் ஊடாக பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு இத் திட்டத்தை சிறப்பாக செயற்படுத்த முடியும் என பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்தார். (6-8-316)

# மணல் கடத்திய மகேந்திரா மடக்கிப் பிடிப்பு

(கரணவாய்)

மணல் கடத்திய வாகனத்தில் ஏறிய பொலிஸ் உத்தியோகத்தரை வீழ்த்தி விட்டு தப்பிச் சென்ற நிலையில் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துன்னாலை-வல்லிபுரம் வீதி ஊடாக மணல் கடத்தி வந்த மகேந்திரா வாகனத்தை பருத்தித்துறை- மருதங்கேணி வீதியில் உள்ள ஆயத்து சந்தியில் பொலிஸார் மறித்துள்ளனர்

இதன் போது மணல் கடத்தி வந்த வாகனம் வேகத்தை குறைத்தபோது பொலிஸார் உத்தியோகத்தர் ஒருவர் அதில் திடீரென பாய்ந்து ஏறிய போது குறித்த வாகனம் வேகமாகப் புறப்பட முற்பட்ட வேளை வாகனத்தில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் வீதியில் விழுந்து படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் போது தப்பிச்சென்ற வாகனத்தை பருத்தித்துறை பொலிஸார் மீட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-6-8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

692



இளவரசி இப்போது கதி கலங்கிப் போனாள். முதன் மந்திரி அநிருத்தரை எரித்துவிடலாமா என்று அவளுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்தது. ஆனால் ஆத்திரத்தை வெளியில் காட்டுவதில் பயனில்லை என்று உணர்ந்தாள். கள்ளங்கபடம் அறியாதிருந்த அந்தச் சாதுப் பெண்ணுக்கு அப்போது எங்கிருந்தோ ஆழ்ந்து சிந்திக்கும் சக்தியும் சூழ்ச்சித் திறனும் ஏற்பட்டிருந்தன. ஆகையால் முதன் மந்திரியின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் "ஐயா! இது என்ன வார்த்தை? இளவரசர் அருள்மொழி வர்மரையா இராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்தார் என்று சொல்கிறீர்கள்? சக்கரவர்த்தியின் அருமைக் குமாரரைப் பற்றி நீர் இவ்விதம் பேசுவது குற்றம் அல்லவா? சோழ குலத்துக்கு எதிரான சதி அல்லவா? ஆகா! இதைப்பற்றி நான் உடனே குந்தவைப் பிராட்டியிடம் சொல்லியாக வேண்டும்!" என்றாள்.

"பேஷாகச் சொல் தாயே! என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டால், பிறகு ஒரு கணங்கூட இங்கே தாமதிக்க வேண்டிய அவசியமில்லை. நானே உன்னை இளைய பிராட்டியிடம் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்"

"தங்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லாவிட்டால்?" "சொல்லாவிட்டால் என்பதே கிடையாது, தாயே! இந்தக் கிழவனிடமிருந்து அவ்வளவு சுலபமாகத் தப்ப முடியாது, என் கேள்விக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும்" என்றார் அமைச்சர்.

"ஐயா! சர்வ வல்லமை படைத்த முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயரே! ஒரு சக்தியும் இல்லாத இந்த ஏழை அபலைப் பெண்ணிடமிருந்து தாங்கள் இளவரசரைப்பற்றி எதுவும் அறிய முடியாது. இந்த யமகிங்கரர்கள் சற்று முன் பயமுறுத்தியது போல் என் கையைத் தீயிலிட்டு எரித்த போதிலும், நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை."

"கொடும்பாளூர் வீர வேளிர் குலத்துதித்த கோமகளே! உன்னுடைய மன உறுதியைக் கண்டு மெச்சுகிறேன். ஆனால் இளவரசரைப் பற்றி ஒரு விபரமும் சொல்ல மாட்டேன் என்று நீ கூறினாயே அது அவ்வளவு சரியன்று. ஏற்கெனவே சில விபரங்கள் நீ சொல்லி விட்டாய். இன்னும் ஒரு விவரத்தையும் சொல்லிவிட்டால் அதிக நஷ்டம் ஒன்றும் நேர்ந்து விடாது. என் வேலையும் எளிதாய்ப் போய் விடும்"

வானதி மறுபடியும் திடுக்குற்றாள், 'வாய் தவறி ஏதாவது சொல்லி விட்டோமோ' என்று நினைத்தபோது அவளுடைய நெஞ்சை யாரோ இறுக்கிப் பிடிப்பது போலிருந்தது உடம்பெல்லாம் பதறியது. 'இல்லை, நான் ஒன்றும் சொல்லி விடவில்லை இந்தக் கிழவர் என்னை ஏமாற்றப் பார்க்கிறார்' என்று எண்ணிச் சிறிது தைரியம் அடைந்தாள். "ஐயா! வேதம் சொல்லும் உம்முடைய வாயிலிருந்து பொய் வரலாமா? சுந்தரசோழரின் முதல் அமைச்சர் இல்லாததைக் கற்பித்துச் சொல்லலாமா? நான் இளவரசரைப் பற்றி எதுவும் கூறவில்லையே? நான் ஏதோ கூறியதாகச் சொல்கிறீரே?" என்றாள்.


"யோசித்துப் பார், தாயே! நன்றாக எண்ணிப்பார்! ஒரு விடயத்தைப் பற்றிப் பேசாமலேயே, அதைப் பற்றிய விவரத்தைத் தெரிவிக்க முடியாது என்று நீ கருதினால், அது பெரிய தவறு. நீ சொல்லாமற் சொன்ன விவரத்தைக் குறிப்பிடுகிறேன் கேள்! இளவரசர் அருள்மொழிவர்மர் கடலில் மூழ்கி இறந்து விட்டதாக உலகமெல்லாம் பேச்சாக இருக்கிறது. குடிமக்கள், அதிகாரிகள் அனைவரும் சோகக்கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள். உனக்கும் அந்தச் செய்தி தெரியும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்பது சிறந்தது



ஒரு ஊரில் மன்னர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு வேட்டையாடுவதில் அதிக இன்பம்.

அவர் தமது ஆயுதங்களுடன் காட்டில் கொடிய மிருகங்களை வேட்டையாடி விட்டு நகருக்கு எல்லையில் உள்ள கோயில் மரத்தின் நிழலில் சிறிது நேரம் ஒய்வாக உறங்கிக் கொண்டிருந்தார்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல் வந்து மன்னரைக் காயப்படுத்தி அவர் தூக்கத்தை கலைத்தது. சுற்றி இருந்த காவலர்கள் நாலா பக்கமும் சென்று ஒரு நடுத்தர வயதுப் பெண்ணை பிடித்து அழைத்து வந்து மன்னர் முன் நிறுத்தினார்கள்.

மன்னர் அந்தப் பெண் மணியைப் பார்த்து, "ஏனம்மா என் மீது கல்லை எறிந்தாய்? அது என் தூக்கத்தை கலைத்ததுடன் என்னையும் காயப்படுத்தி விட்டது" என்றார்.

அதற்கு அந்த பெண் அரசரை பார்த்து, "மன்னர் பெருமகனே நான் காட்டில் விறகு வெட்டியும் அவைகளை பொறுக்கியும், நாட்டில் விலைக்கு விற்று அதில் கிடைக்கும் வருமானத்தில் என் குழந்தைகளுக்கு உணவு அளிக்கிறேன்.

வரும் வழியில் மரத்தில் பழங்கள் இருப்பதைப் பார்த்தேன். என் குழந்தைகளின் நினைவு வந்தது. பிள்ளைகளின் பசியைப் போக்குவது பெற்றவள் கடமை அல்லவா? அந்த பழங்களை பறிப்பதற்காக ஒரு கல்லை எடுத்து மரத்திற்கு எறிந்தேன். தாங்கள் மர நிழலில் உறங்கிக் கொண்டிருந்தது தூரத்தில் இருந்த எனக்கு தெரிய0வில்லை.

நான் எறிந்த அந்தக் கல்லானது உங்கள் மீது பட்டு உங்கள் தூக்கத்தைக் கலைத்ததுடன் உங்களையும் காயப்படுத்தி விட்டது. இந்தத் தவறுக்கு நான் தான் காரணம்.தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்" என்று வேண்டி நின்றாள். மன்னர் அந்த பெண் மணியைப் பார்த்து, "பெண்ணே, நீ செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கின்றாய்.

தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமாற்றமே நாம் உலகிற்கு அளிக்கக் கூடிய உயர்ந்த பரிசு. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## களவைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் தீவிரம் காட்டுவரா

ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்ற சிந்தனை தானாக எழுந்ததன்று.

மாறாக, கடந்த காலங்களில் நடந்த ஊழல்கள், சட்டவிரோதங்கள், களவு, கொள்ளை, கொலை போன்றவை காரணமாக மக்கள் பெரும் அவலத்தைச் சந்தித்தனர்.

இந்நிலையிலேயே ஆட்சி மாற்றம் தேவை என்ற நினைப்பு எழுகை பெறுகிறது.

ஆட்சியை மாற்றினால், காட்சி மாறும் என்பது எடுகோள்.

அதாவது மாறி மாறி ஆட்சிக் கட்டிலில் அமருகின்றவர்களால் இந்த நாடு பேரவலத்தைச் சந்தித்து வருகிறது.

எனவே ஆட்சி மாற்றம் தேவை என்ற மக்களின் சிந்தனை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரங்கேறியது.

ஆம், அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்க, அவர் தலைமையிலான அரசாங்கம் அமையப் பெற்றது.

இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஊழலை, அரசியல் செல்வாக்கை, களவுகளை, கொலை கொள்ளைகளைத் தடுக்கும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பு.

ஆனால் எதுவும் இன்னமும் நடந்ததாகத் தெரியவில்லை.

உண்மை. வடபுலத்தைப் பொறுத்தவரை இங்கு களவு என்பது மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது. அதிலும் குறிப்பாக பளைப் பகுதியை உள்ளடக்கிய பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள தென்னந் தோட்டங்களில் இடம்பெறுகின்ற களவுகள் சொல்லிமாளா.

வெளிநாடுகளில் உள்ள நம்மவர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் ஏக்கர் கணக்கில் காணிகளை வாங்கி அதில் தென்னஞ் செய்கையில் ஈடுபட்டனர்.

தென்னைகள் வளர்ந்து அவை காய்க்கின்ற நேரத்தில் அங்கு களவுப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக – தீராத பிரச்சினையாக நீடித்தபோது, தங்கள் தென்னந்தோட்டங்களை விற்பனை செய்கின்ற பரிதாப நிலைக்கு அவர்கள் ஆளாகியுள்ளனர்.

இதுதவிர, இப்போது பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்து தென்னந்தோட்டச் செய்கையில் ஈடுபட்டவர்கள் தலையில் கைவைக்கின்ற நிலைமைக்கு வந்துள்ளனர்.

எனினும் இதுகுறித்து பளைப் பொலிஸார் தமது நடவடிக்கையை தீவிரப்படுத்துவதாகத் தெரியவில்லை.

குறித்த களவு தொடர்பில் பலரும் பொலிஸில் முறைப்பாடு செய்தபோதிலும் அதுபற்றி பொலிஸார் ஏனோதானோ என்ற மனநிலையில் உள்ளனர்.

இதுகுறித்து தென்னந்தோட்ட உரிமையாளர் ஒருவர் பளையிலுள்ள பிராந்திய தென்னம் பயிர்ச்செய்கைச் சபை அதிகாரி ஒருவரிடம் முறையிட்டபோது அந்த அதிகாரி, அரச தென்னந்தோட்டங்களிலும் களவு மோசமாக உள்ளது எனக் கூறியுள்ளார்.

ஆக, நிலைமை இதுவாக இருக்கும்போது, அநுர தலைமையிலான அரசாங்கத்தால் நாட்டை நிமிர்த்த முடியுமா? என்ற கேள்வி எழவே செய்யும்.

எனவே வடபகுதியில் அதிலும் குறிப்பாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள தென்னந்தோட்டங்களில் மிக மோசமாக இடம்பெறுகின்ற களவு குறித்து பொலிஸாரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

# அநுர அரசின் வாய்ச்சொல் வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்

## அரசின் மெத்தனப் போக்கை கடுமையாக சாடுகிறார் சஜித்

*(கம்பஹா)*

தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அள்ளி வழங்கி மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிப் பீடமேறிய அநுர அரசு மக்கள் எதிர்பார்த்த எதனையும் செய்யவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தினார்.

கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"நாட்டின் தற்போதைய நிலையைப் பார்க்கும் போது மக்கள் எதிர்பார்த்த எதனையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை. மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

நிறைவேற்ற முடியாத எதிர்பார்ப்புகளை வழங்கிவிட்டு ஆளும் தரப்பினர் தற்போது, திணறி வருகின்றனர். வலுவான வேலைத்திட்டமும் அதற்குத் தேவையான தொலைநோக்குப் பார்வையும் இந்த அரசாங்கத்திடம் இல்லை. அரசாங்கத்தின் பேச்சுக்கள் நன்றாக இருக்கின்றது.ஆனால் செயல் பலவீனமாகவும் மெத்தன போக்கிலும் காணப்படுகின்றன. இதனால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு மாற்றுவழி இந்த அரசிடம் இல்லை. மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் போது மாற்று வாழ்வாதார ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான புதிய ஏற்பாடுகள் இந்த அரசிடம் இல்லை.

அரிசி, தேங்காய்க்கும் கூட தட்டுப்பாடு உள்ளது. இறக்குமதி பொருட்களுக்குக் கூட தட்டுப்பாடுகள் நிலவுகின்றன.

மின்சார கட்டணம் 33 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று கூறப்பட்டாலும், இதுவரை குறைக்கப்படவில்லை.

மின்சார சபைக்கு அதிக இலாபம் கிடைத்தாலும் மக்களுக்கு அதன் பலாபலன்கள் கிடைக்கப்பெறவில்லை என்றார். (ம-7)

### அடையாள அணிவகுப்பின் பின்னர்

## மன்னார் இரட்டைப் படுகொலை சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று புதன்கிழமை(29) உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுக் கைது செய்யப்பட்ட மேலும் ஒரு சந்தேக நபரை நாளை (இன்று) வரை பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது மன்னார் நீதிமன்றத்தின் மூடிய அறைக்குள் தனித்தனியாக அடையாள ஆள் அணிவகுப்பு இடம் பெற்றது.

இதன் பின்னரே ஏற்கனவே கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்தவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததோடு பெண் ஒருவர் உள்ளடங்களாக இருவர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## நிதி இணக்க சபையை நிறுவுவதற்குத் தீர்மானம்

விசேட நிதி இணக்க சபை ஒன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிதி தொடர்பான பிரச்சினைகளை நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதற்கு முன்பாக அவற்றைத் தீர்ப்பதற்கு குறித்த இணக்க சபை நிறுவப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி முதல் கட்டமாக கொழும்பு, கம்பஹா, கண்டி, அநுராதபுரம், பொலநறுவை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் குறித்த விசேட நிதி இணக்கச் சபை நிறுவப்படவுள்ளது.

அதற்காக விசேட துறைசார் நிபுணர்கள் நியமிக்கப்படவுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். (ம-7)

## பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டமானது நாளை மறுதினம் 01.02.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வட்டுக்கோட்டை மாவடி அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் திருமண மண்டபத்தில் சங்கத் தலைவர் தயாளலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## ரி.என்.எ முக்கியஸ்தருக்கு ரி.ஐ.டியினர் அழைப்பாணை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (ரி.என்.எ) மத்திய செயற்குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியனுக்கு பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் (ரி.ஐ.டி) அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 01.02.2025 ஆம் திகதி காலை 10 மணிக்கு அளம்பில் பொலிஸ் நிலையத்தில் அமைந்திருக்கும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் முல்லைத்தீவு உப பிரிவில் வாக்குமூலம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னிலையாகுமாறு அவருக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

### அத்துமீறி மீன்பிடி

## 11 இந்திய மீனவர்களுக்கும் 10ஆம் திகதி வரை மறியல்

*(காங்கேசன்துறை)*

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 13 இந்திய கடற்தொழிலாளர்களில் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த இருவர் தவிர ஏனைய 11 தொழிலாளர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பினுள் படகொன்றினுள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட 13 இந்திய கடற்தொழிலாளர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்ய அவர்களது படகினுள் ஏறிய வேளை கடற்படையினருடன் படகில் தப்பிச் செல்ல முற்பட்ட இந்திய கடற்தொழிலாளர்களின் படகின் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படகில் இருந்த 13 கடற்தொழிலாளர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 13 பேரில் இருவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில், அவர்கள் இருவரையும் காங்கேசன்துறைப் பொலிஸார் ஊடாக யாழ் . போதனா வைத்தியசாலையில் கடற்படையினர் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தனர்.

இந் நிலையில் , ஏனைய 11 கடற்தொழிலாளர்களையும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை அவர்கள் 11 பேரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி - II

11



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

| முசலி பிரதேச சபைத் தேர்தல் – 2018 | | | | |
|---|---|---|---|---|
| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
| 1 | அரிப்பு மேற்கு | MN 134 | ITAK | 427 |
| 2 | அரிப்பு கிழக்கு | MN 135 | ITAK | 340 |
| 3 | பண்டாரவெளி | MN 137, MN 138 | UNP | 760 |
| 4 | புதுவெளி | MN 136, MN 146 | SLMC | 377 |
| 5 | சிலாவத்துறை | MN 144, MN 145, MN 148 | UNP | 567 |
| 6 | அகத்திமுறிப்பு கூழாங்குளம் | MN 143, MN 147 | SLMC | 750 |
| 7 | பொற்கேணி | MN 141, MN 142 | UNP | 444 |
| 8 | மருதமடு வேப்பங்குளம் | MN 139, MN 140 | UNP | 757 |
| 9 | கொண்டச்சி | MN 149, MN 150 | UNP | 753 |
| 10 | பாலைக்குழி | MN 151, MN152, MN 153 | UNP | 963 |

மாந்தை மேற்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 1055.21 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 21257 பேர்.

2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 18 636 ஆகும்.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), சுயேட்சைக் குழு (IND), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) மற்றும் ஶ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) ஆகியன போட்டியிட்டன.

| மாந்தை மேற்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018 கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | மாந்தை மேற்கு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 9 பல் – 2 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 13 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 25 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 5,263 | 35.27% | 7 | 11 | - | 4 |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 3,628 | 24.31% | 5 | 2 | 3 | - |
| ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,102 | 14.09% | 3 | - | 3 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,328 | 8.90% | 2 | - | 2 | - |
| ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,040 | 6.97% | 2 | - | 2 | - |
| சுயேச்சைக் குழு | 684 | 4.58% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 466 | 3.12% | 1 | - | 1 | - |
| ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 216 | 1.45% | - | - | - | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 195 | 1.31% | - | - | - | - |
| மொத்தம் | 14,922 | 100% | 21 | 13 | 12 | 4 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 14,922 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 129 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 15,051 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 18,636 |

| மாந்தை மேற்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018 | | | | |
|---|---|---|---|---|
| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
| 1 | வெள்ளாங்குளம் | MN 1, MN 2, MN 3 | UNP | 414 |
| 2 | இலுப்பைக்கடவை | MN 4, MN 5, MN 6, MN 7, MN 8, MN 9 | ITAK | 550 |
| 3 | பெரியமடு | MN 15, MN 16, MN 17 | UNP | 718 |
| 4 | விடத்தல்தீவு (இரு அங்கத்தவர்) | MN 10, MN 11, MN 12, MN 13, MN 14 | UNP | 888 |
| 5 | நெடுங்கண்டல் | MN 18, MN 19, MN 20, MN 21, MN 24 | UNP | 380 |
| 6 | ஆட்காட்டிவெளி | MN 27, MN 28, MN 29, MN 30 | UNP | 449 |
| 7 | அடம்பன் | MN 22, MN 23, MN 25, MN 26 | UNP | 376 |
| 8 | வட்டக்கண்டல் (இரு அங்கத்தவர்) | MN 31, MN 32, MN 33, MN 34, MN 35, MN 36 | UNP | 664 |
| 9 | மடு | MN 37, MN 38, MN 39, MN 40, MN 41 | ITAK | 496 |
| 10 | இரணைஇலுப்பைக்குளம் | MN 42, MN 43, MN 44 | UNP | 338 |
| 11 | காக்கையன்குளம் | MN 45, MN 46, MN 47 | UNP | 700 |

## 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் - முல்லைத்தீவு மாவட்டம்

### 01 மாந்தை கிழக்கு பிரதேச சபை

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் மொத்தமாக 15 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை யாவும் தனி உறுப்பினர் வட்டாரங்கள் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 8 ஆகும்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 457.32 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 7527 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 5184 ஆகும். இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), தமிழர் விடு தலைக் கூட்டணி (TULF), மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

(தொடரும்)

| மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018 கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | மாந்தை கிழக்கு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 8 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 8 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 13 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 1,836 | 42.83% | 6 | 4 | 2 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,505 | 35.11% | 4 | 4 | - | - |
| ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 523 | 12.20% | 2 | - | 2 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 192 | 4.48% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 122 | 2.85% | - | - | - | - |
| ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 46 | 1.07% | - | - | - | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 34 | 0.79% | - | - | - | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 29 | 0.68% | - | - | - | - |
| மொத்தம் | 4,287 | 100% | 13 | 8 | 5 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 4,287 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 49 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 4,336 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 5,184 |

| மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018 | | | | |
|---|---|---|---|---|
| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
| 1 | விநாயகபுரம் | MUL 13, MUL 14 | UNP | 179 |
| 2 | கரும்புள்ளியான் | MUL 07, MUL 08 | ITAK | 241 |
| 3 | பாண்டியன்குளம் | MUL 09 | ITAK | 285 |
| 4 | பாலிநகர் | MUL 06 | ITAK | 346 |
| 5 | ஒட்டறுத்தகுளம் | MUL 02, MUL 03, MUL 04 | UNP | 420 |
| 6 | பனங்காமம் | MUL 01, MUL 11 | UNP | 268 |
| 7 | செல்வபுரம் | MUL 05, MUL 10 | ITAK | 253 |
| 8 | தந்தன்கண்டல் | MUL 12, MUL 15 | UNP | 191 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெப்ரவரி...

திகதி சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இதுபற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பெப்ரவரி 05ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப 10.00 மணி முதல் மு.ப 10.30 மணிவரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (4 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இளம் குடும்பஸ்...

டுள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரிய குளம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் நேற்று அப்பகுதியில் நடைபெற்ற ஆலயத் தீர்த்தத் திருவிழாவிற்கு சென்றிருந்த நிலையில் குளத்தில் குளிக்கச் சென்று நீரில் மூழ்கிய நிலையில் நேற்றுப் பகல் காணாமல் போயிருந்தார்.

இவரை பிரதேச மக்கள் நீண்ட நேரமாகத் தேடிய நிலையில் நேற்று மாலை குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## 15 பேர் தருமபுரம்...

பேரும் கிளிநொச்சி தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்ணகிநகர் அம்பிகை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களே குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். (ம-7, 316)

## அர்ச்சுனா எம்.பி...

மீது சுமத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் இராமநாதன் அர்ச்சுனா எம்.பி முன்னிலையாகியவேளை, சந்தேகநபர் சுலோச்சனா இராமநாதன் எனப் பெயர் குறிப்பிட்டிருந்தமையால் அர்ச்சுனா விடுவிக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்குத் தொடர்பில் எதிர்வரும் 3ஆம் திகதி விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்குக் கட்டளையிட்டிருந்தது.

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் விசேட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து நேற்று சாவகச்சேரியில் வைத்து இராமநாதன் அர்ச்சுனா எம்.பியைக் கைது செய்து அநுராதபுரத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்றிரவு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-7)

## விரிவுரைகள்...

இன்று பல்கலைக்கழக விரிவுரைகள் நடைபெறும் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குற்றமிழைத்த மாணவர்கள் ஒழுக்காற்றுச் சபையின் தீர்மானத்துக்கு அமைய தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தது தெரிந்ததே. (ம-7)

## யோஷிதவிட...

செயலாளர், தனிநபர்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட துப்பாக்கிகளிலிருந்து 182 துப்பாக்கிகள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன.

யோஷித ராஜபக்ஷவிடம் இன்னும் இரண்டு துப்பாக்கிகள் இருப்பதாகவும் தெரிவித்தார். (ம-7)

## பொறுப்புக்கூறல்...

பொறுப்பான அமைச்சர் கத்தரின் வெஸ்ட் தெரிவித்தார்.

பிரித்தானியாவின் இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கத்தரின் வெஸ்ட் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்திருந்தார்.

இதன்போது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்குடன் இணைந்து நடந்த சந்திப்புக்களின் ஓர் அங்கமாக கத்தரின் வெஸ்ட்டுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்.ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் பிரித்தானியாவில் வாழ்வதாகச் சுட்டிக்காட்டிய கத்தரின் வெஸ்ட், அதன் காரணமாக இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தாம் பெரிதும் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அதன்பிரகாரம் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம், சமஷ்டி முறைமை உள்ளடங்கலாக தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய இரு பிரதான விடயங்களில் தமிழர்களின் எதிர்பார்ப்பு மற்றும் தற்போது அடையப்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் என்ன என்பது பற்றி அறிந்துகொள்ள விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதோடு பொறுப்புக்கூறல் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரிட்டன் முன்னின்று செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த கத்தரின் வெஸ்ட், இது பற்றி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் தாம் கலந்துரையாடிய போதிலும் அவர்கள் ஓரிரு வார்த்தைகளிலேயே பதிலளித்ததாகக் கூறினார்.

மேலும் பிரித்தானியாவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம்வகிக்கும் ஏனைய நாடுகளும் ஒன்றிணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதற்குரியகொள்கை மட்டத்திலான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். அதனூடாக பொறுப்புக்கூறல் விடயத்தில் மாத்திரமன்றி அரசியல் தீர்வு விடயத்திலும் அரசாங்கத்தின் மீது மறைமுக அழுத்தத்தைப் பிரயோகிக்கமுடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

அதனைச்செவிமடுத்த பிரித்தானிய அமைச்சர் கத்தரின் வெஸ்ட், பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அப்பால் இலங்கை அரசாங்கத் தரப்பிலிருந்து குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டார்.

இந்நிலையில் இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேணப்பட்டுவரும் அணுகுமுறையை தமது அரசாங்கம் மீளாய்வுக்கு உட்படுத்த விருப்பதாகவும் இதுகுறித்து வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 5731
H 2 3 7 7 7 9
அத சம்பத H 7 7 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 306
National Lotteries Board

தன நிதானய
திகதி 2025.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 1761
U 41 58 75 77 U
Double Chance 06752

மெகா பவர்
திகதி 29/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2079
W 16 15 28 41 50

லக்கி 7 VIP
திகதி 2025.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 557
O 2 7 4 6 3 5 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3973
சீட்டிழுப்பு திகதி 29.01.2025
G 05 10 20 74
G

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 1040
மகரம் 17 20 49 50 மகரம்
27391 15

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.01.2025 வெற்றி வாரம் 439
D 3 8 2 1 5 0
54751
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,087,066.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2705
சீட்டிழுப்பு திகதி 2025.01.29 தினம் புதன்கிழமை
07 08 31 60 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,919,792.00
DLB

சனிதா
திகதி 29.01.2025 வெற்றி வாரம் 4866
28 45 54 74 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,537,903.20
69647
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.01.29 வெற்றி வாரம் 2099
04 19 51 59 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,592,267.60
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4417
சீட்டிழுப்பு திகதி 29.01.2025 தினம் புதன்கிழமை
20 27 30 57 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,889,518.00
126433
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 12 26 45 57 59
1881
29.01.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.563,527,897.80
DLB

அட கோட்டிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் 2531
சீட்டிழுப்பு திகதி 2025.01.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,017,428.00
07 12 28 74 Q
209426
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH
## Grade 6 - O/L

- Grammar
- Text Book
- Speaking
- Presentation
- Monthly Exam
- Model Exam

By : P.MATHAN

NEWTON Group Classes

077 792 3653 NALLUR

(3259)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2161)

076 825 7716 (ஆகாஸ்)

# தேவை

O+, O- இரத்தத் தொகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கல்லீரல் (Liver) தேவைப்படுகிறது. 40 வயதிற்கு உட்பட்டவர்கள் இதனை வழங்கலாம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

076 936 5029,
077 036 6300, 021 224 2422

(2263)

MARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில்
இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 219.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~390~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~698~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
074 2327 545

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
074 1011 345

(C-2163)

# நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்

076 314 4689,
076 008 6961, 077 844 9861

(3269)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## யோக்கட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.

48/= ~~80/=~~

Happy Supermarket
உரும்பிராய்

+94 76 800 65 00

(797)

## V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-2160)

# CANADA, UK VISA

100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

- Swiss Visa
- German Visa
- France Visa
- Norway Visa

அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

Exponet Overseas consultant No-125, Arasady Road, Jaffna.

071 415 0995, 021 435 5113

(3267)

## பணியாளர் வெற்றிடம்

**ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமிப்பதற்கும், சிறுவர் இல்லங்களின் பிள்ளைகள் பராமரிப்பாளர் பணிக்கும் விண்ணப்பம் கோரல்**

கிளிநொச்சி ஜெயந்திநகரில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பிள்ளைகளின் தேவை கருதி அமைக்கப்படவுள்ள விழா மண்டப கட்டுமான வேலைகளினை முழுமையாக மேற்பார்வை செய்து சிறப்பாக செய்து முடிப்பதற்கு ஏற்ப தகுதிவாய்ந்த ஆண் தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமிப்பதற்கும் எமது சிறுவர் இல்லத்தின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான ஆண், பெண் பணியாளர்களை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாகப் பின்வரும் தகுதியினை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. பணியாற்ற விரும்புவோர் எதிர்வரும் 11.02.2025 இற்கு முன்னர் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தங்களின் சுய விபரத்தினை பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

**தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான தகைமைகள்**

1. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.
2. 25 - 55 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. NDT/HNDE or NCT(Civil/QS)/HND B.Tec Level 5 (Civil/QS) தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வேலை முன் அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.
5. நல்ல உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**பராமரிப்பாளர்களுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25 - 55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. க.பொ.த உயர்தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை.
3. நல்ல உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. Child Care NVQ தொழிற்தகைமைச் சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்.

**அனுப்பவேண்டிய முகவரி**
**தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**0214923118 / 0773240950**

(C-2158)

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் வீதி – கோண்டாவில்

## இணைந்த கணிதம்
## A.பத்மநாதன்

A/L
2024 மீட்டல்
2025 வகுப்புக்கள்
2026 வகுப்புக்கள்

- பௌதிகவியல் : திரு. T.சம்பந்தன்
- இரசாயனவியல் : திரு. S.சுரேஸ்குமார்
- உயிரியல் : திரு. R.குகானந்தன்

**வகுப்புக்கள் ஆரம்பம் : 02.02.2025**

ஞாயிறு 4 மணி நேரசூசி மாற்றப்படும்

உங்கள் பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள்

- நிர்வாகி -

தொடர்புகளுக்கு:

0777 960 138/ 076 105 6556

(C-2162)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org